# *2018 ஆவணி மாத சங்க குடும்ப தின நற்செய்தி*

01. புகழ்ச்சிக்கான உள்ளாக்கம்

**“அனைத்தம் அவரால் உண்டாயின. உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாக வில்லை”** (புனித யோவான் 1:3)

**“அவரால் அன்றி”** அதாவது அனைத்தும் உண்டானது தர்மமானவர், வார்த்தையானவரான இயேசுக்கிறிஸ்துவினாலேயே இறைவனது வார்த்தை.

**“உலகம் முழுமையும் கடவுளின் சொல்லால் உருவாக்கப்பட்டது. என்றும் காணப்படாதவற்றினின்று காணப்படுகிறவை உண்டாயின என்றும் நம்பிக்கையாலேயே புரிந்து கொள்கின்றோம்”** (எபிரேயர் 11:3)

**“அனைத்து படைப்புக்களும் இறைவனின்று வெளிப்படும் வார்த்தையாகும். அவை அனைத்தும் இறைவனை வெளிப்படுத்துகின்றன.”**

(புனித பொனவென்சர் அடிகளார்)

படைப்பினின்று வெளிப்படும் இறைவனின் வார்த்தையை தியானித்தவாறு நாம் புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

புபுது பாடல் இல 135 சகல படைப்பிற்கும்………

புபுது பாடல் இல 55 ஆண்டவரே எழிலான………..

02. நாளுக்குரிய நற்செய்தி

**“கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார்”** (தொடக்கநூல் 1:27)

(அ) படைப்பாளர் மனிதனுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் பலவற்றை வழங்கியுள்ளார்.

- பிராணிகள, கால்நடைகளுக்கு சமமில்லாத, பெறுமதியான வரலாற்று புகழ் மிக்க உடல்.
- விமர்சனத்திற்கு எச்சரிக்கையாவதற்கான அறிவு
- தீர்மானம் எடுப்பதற்கான சுதந்திரமும், நல்லது கெட்டதை தீர்மானித்து முடிவெடுக்கக்கூடிய மனச்சாட்சியும் கிடைத்துள்ளது.

(ஆ) இயற்கை நீதி என்பதாக விளக்கம் தரப்படுகின்ற மனச்சாட்சி “சுய ஞானத்தில்” (தெரிந்தே) தனது பொறுப்பிற்கு விழிப்புறுகின்ற அனைத்து மனிதனுக்கும் நல்லது செய்தபடி, கெட்டதை தடுப்பதற்காக வரும் உள்ளாந்திர சத்தமாக தனக்குள் இருப்பதாக உணர்கிறது.

நாம் மனச்சாட்சிக்கு செவிகொடுக்காமை, இறைவார்த்தைக்கு செவிகொடுப்பதினின்றும் நம்மை தூர விலக்குகின்றது. இறைவார்த்தைக்கு செவிகொடுப்பது எல்லாவற்றிற்கும் முதலாக எம்மை வழிநடத்தம் எம் மனித இதயத்தினுள் எழுதியுள்ள இந்த நீதிக்கு கீழ்படிந்து வாழ்வை கழிப்பதற்கான அத்தியாவசியத்தை மதிப்பதற்காகும். (ஔவைது பெனடிக் பரிசுத்தபாப்பரசர்)

- திருச்சட்டம் கற்பிக்கும் ஒழுக்க நெறிதங்கள் உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் தங்கள் நடத்தையில் காட்டுகிறார்கள். அவர்களது மனச்சான்றே இதற்குச் சாட்சி ஏனெனில், அவர்கள் செய்வது குற்றமா, குற்றமில்லையா என அவரவர் எண்ணங்களே வெளிப்படுத்துகின்றன. (உரோமயர் 2:15)

- **“ஆனால், என் உறுப்புக்களில் வேறொரு சட்டத்தைக் காண்கிறேன் என் மனம் ஏற்றுக் கொள்ளும் சட்டத்தை அது எதிர்த்து போராடுகிறது. என் உறுப்புக்களில் இருக்கும் அந்தப் பாவசட்டத்திற்கு என்னைக் கட்டுப்படுத்துகின்றது”** (உரோமர் 7:23)

(இ) கலந்துரையாடல்

01. 1. மனச்சாட்சி என்றால் என்ன?
    2. மனச்சாட்சி மற்றும் இறைவார்த்தைக்கு செவிமடுத்தல் இரண்டிற்கும் இடையிலான தொடர்பு என்ன?
    3. மனச்சாட்சி பற்றி பரிசுத்த வேதாகமத்தின் 2 பகுதிகளிலும் கிடைக்கும் செய்தி என்ன?

02. உரோமர் 7:23

- புனித பவுலடிகளார் கூறும் வண்ணம் இயேசுகிறிஸ்துவை முன்கொண்டு நாம் சுதந்திரம் பெறுவது எம்மை அடிமை நிலைக்கு உள்ளாக்கும் பாவசட்டத்தின்றே **“நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை அதைச் செய்யத்தான் முடியவில்லை”** (உரோமர் 7:18)
- எமது மனதினுள் இருக்கும் பாவசட்டத்தின் அடிமைதனத்திற்கு எம்மைத் தூண்டும் (“வேறு குறிக்கோளை” இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் தோற்கடித்தார்.
- **“உங்கள் மூதாதையரிடமிருந்து வழி வழியாய் வந்த வீணாண நடத்தையினின்று உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அதுபொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டது அல்ல. மாறாக மாசுமறுவற்ற ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர் மதிப்புள்ள இரத்தமாகும்.”** (1பேதுரு 1:18-19)
- மனச்சாட்சிக்கு செவிகொடுப்பதற்கு எமக்கு இருந்த முடியாமைக்கு இயேசுகிறிஸ்துவின் மீட்பின் வல்லமையை முன்கொண்டு எமக்கு மீட்புகிடைத்துள்ளது. அதற்கான சான்று நாம் பெற்றுள்ள தூயஆவியானவரே.
- புனித பேதுரு கூறுவது போன்று மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று இயேசுக்கிறிஸ்து ஆண்டவரின் உயர் மதிப்புள்ள இரத்தத்தை முன்கொண்டு எம்மை மீட்டுள்ளார். இப்பொழுது வரப்பிரசாதத்தின் வழியாய் மனிதனுக்கு இறை புத்திரத்தன்மையை அனுபவித்தவாறு தனது முடியாமையினின்று மேலெழுப்பி இருப்பதற்கு வல்லமை கிடைத்துள்ளது.
  “தூயஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையை பெறுவீர்கள்” (திருத்தூதர் பணி 1:8)

03. பகிர்ந்துகொள்ளல்
    01. மறுமலர்ச்சியடைந்த கிறிஸ்தவனாவதற்கு முன்னர் நீங்கள் வாழ்வில் கைக்கொண்ட வீணாக வாழ்க்கை வழியினின்று இப்பொழுது மீட்பினை பெற்றுள்ளீர்களா?
    02. நல்லது செய்வதற்கு எனக்கு இப்பொழுது கிறிஸ்து இயேசுவை முன்கொண்டு இறை வரப்பிரசாதத்தினால் சக்தி கிடைத்துள்ளது என்பதை அனுபவிக்கின்றீர்களா?
    03. இயேசுக்கிறிஸ்துவுக்குள் மீண்டும் பிறந்துள்ளவர்களாக அவரது வார்த்தையின் மீது தனது வாழ்வினை கட்டியெழுப்புவதற்கானதே எமது அழைப்பு. இறைவார்த்தையின் மீது எமது வாழ்வினைகட்டியெழுப்புவது நிரந்தரம் மற்றும் நிலைப்பாட்டினை எமக்குப் பெற்றுத்தரும்.

- புனித மத்தேயு 7:24
- இறைவார்த்தை யார்த்தம் (உண்மை நிலை) குறித்து எமக்குள் இருக்கும் நிலைப்பாட்டினை மாற்றிட எம்மைத் தூண்டும்.
  யதார்தவாதி என்பது அனைத்தினதும் அத்திவாரம். இறைவார்த்தை என்பதை அறிந்து கொண்ட ஒருவன் என்பதாகும். இந்த யதார்த்தவாதி உண்மை நிலையை கண்டு கொள்வது என்பது தற்காலத்திற்கும் மிகவும் அவசியமானதொன்றாகும்.
- சொத்து, சுகங்களில் ஆசைகள், பாவணைகளால் மனித உள்ளத்தின் எண்ண உணர்வுகளை நிறைவேற்றிட முடியாது என்பதனை நாம் புரிந்துகொண்டது எமக்கு ஏற்படும் எதிர்பாராத நோய்களுக்கு, வாழ்வின் சவால்களுக்கு எம்மால் கட்டுப்படுத்த முடியாத இயற்கை அனர்த்தங்களுக்கு, மனித அன்பு கிடைக்காத போது, மானசீக விழுதலுக்கு நாம் முகங்கொடுக்கும்போதேயாகும்.
- பொருளாதார கொள்கை, சமூகக் கொள்கை, லிபரல் கொள்கை போன்ற பல்வேறு கொள்கைகள் உலகை மீட்டிடும் (அபிவிருத்தி செய்திட) கருவியாகி மனிதனின் சுகத்தினை மேம்படுத்தும் நோக்கில் உலகில் செயல்பட்டாலும், நாளுக்கு நாள் விருத்தியடையும் மனிதனின் துன்ப நிலை, சுயநலம் உச்சமடைதல், ஒற்றுமையின்மை பாவம் அரசாளுதல் (சிறுவர் துஂபிரயோகம், தன்னினசேர்க்கை விவாகம், கருக்கலைப்பு) யுத்தம் (இனங்களுக்கிடையில் ஃ அரசுகளுக்கிடையில்) ஏழ்மை, அகந்தை போன்றவற்றால் மனிதனின் மற்றும் உலகின் வீழ்ச்சியை நாம் பார்க்கையில் எமது வாழ்வினை நிலைநிறுத்திட ஒருநிலையான அத்திவாரத்தின் அவசியம் எமக்குள் எழுகிறது.
- **“ஆண்டவரே ! என்றென்றைக்கும் உள்ளது உமது வாக்கு விண்ணுலகைப் போல் அது நிலைத்துள்ளது. தலைமுறை தலைமுறையாய் உள்ளது உமது வாக்குப்பிறழாமை நீர் பூவுலகை உறுதியாய் இருக்கச் செய்தீர். அது நிலைபெற்றுள்ளது”** (திருப்பாடல் 119: 89-90)

04. கலந்துரையாடல்

01. இறைவார்த்தையை எமது வாழ்வில் அத்திவாரமாக்கிக்கொண்ட மக்கள் என்றவகையில் உங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும்.
02. இறைவார்த்தையை தேடுதல் தனிப்பட்ட வாழ்வினில், குடும்பத்தில், இக்காலப்பகுதியில் விழிப்புறும் நிலை முன்னேற்றம் கண்டுள்ளதா?
    அனுபவம் எவ்வாறானது?
03. வாழ்வில் பொலவே நாட்டின், சமூகத்தின் அடித்தளமாக வேண்டியது இறைவார்த்தையே. கலந்துரையாடவும்.
04. வருகிற மாதம் முழுவதும் இதில் வாழ்ந்திட அக்கினியை மூட்டுமாறு தூயஆவியானவரின் திருமுழுக்கினை வேண்டி செபியுங்கள்.